WANTED
ENGLISH TEACHER
GOOD SALARY
DESERVING CANDIDATES
HILTON MATRIC.HR.SEC.SCHOOL
#7,Works Road,New Colony,Chromepet,Chennai - 44
Ph: 044-2241 1552 & 2241 8061
E-mail: hiltonschool90@gmail.com



# GST ROAD NEWS

TAMBARAM

Weekly News Paper

Email:gstroadnews@gmail.com www.gstroadnews.com

Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar

Vol:13 Issue - 33 30 Nov 2025 - 06 Dec 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



WANTED
SITE ENGINEER
FOR CONSTRUCTION COMPANY
(FRESHER & EXPERIENCE)
SRI DEVI BUILDERS
88383 60063
96771 14444


## டிட்வா புயலால் விமானங்கள் ரத்து

டிட்வா புயல் காரணமாக சென்னை விமான நிலையத்தில் நாளை (நவம்பர் 30) 47 விமானங்களின் சேவைகள் ரத்து. 36 உள்நாடு, 11 சர்வதேச விமானங்களின் சேவைகள் ரத்து என அறிவிப்பு. பயணிகள் தங்களது விமான நிறுவனங்களை தொடர்பு கொண்டும், விமானங்களின் நிலவரத்தை இணையதளத்தில் சரிபார்த்தும் அதற்கு தகுந்தாற்போல பயணத்திட்டத்தை வகுக்கவும் அறிவுறுத்தல்.

## குரோம்பேட்டை தாம்பரத்தில் கனமழை

தாம்பரம், குரோம் பேட்டை, பல்லாவரம், மீனம்பாக்கம், ஆலந்தூர், பெருங்களத்தூர், முடிச்சூர், சேலையூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், பம்மல், அனகாபுத்தூர் உள்ளிட்ட இடங்களில் மிதமான மழை பெய்து வருகிறது.காலை முதலே மேகமூட்டத்துடன் ஆங் ஆங்கே லேசான மழை பெய்த நிலையில் தற்போது நல்ல கனமழை தொடர்ச்சியாக பெய்து வருகிறது. இதனால் பணி முடித்து வீடு திரும்புவோர், வாகன ஓட்டிகள் அவதியுற்றனர்.


PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
NEW PROJECT

FLATS @ CHROMPET
JESUPATHAM ST, RADHA NAGAR
LUXURIOUS-3 BHK
CUSTOMISATION AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
NO WATER LOGGING
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

ஜெயம் ஊழியங்கள்
JEYAM MINISTRIES Healing to the Brokenhearted
உடைந்த உள்ளங்களுக்கு ஆறுதல்
கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்
கேரல்ஸ் ★ நடனம் ★ கேம்ஸ் ★ விருந்து ★ பரிசுகள்
வாருங்கள் ஒன்றாக கொண்டாடுவோம்
சனிக்கிழமை டிசம்பர் 6 மாலை 6 மணி
இடம்:
அன்னை அருள் திருமண மண்டபம்,கேம்ப் ரோடு ஜங்ஷன், சேலையூர்,கிழக்கு தாம்பரம்,சென்னை 600073
7358 640 398, 7358 640 399, 7358 640 400

INDEPENDENT DUPLEX VILLA
FOR SALE@ URAPAKKAM
NR.KILLAMBAKKAM BUS STAND

3 BHK
2119 Sqft
LAND
1011 Sqft
CCP,AS PER VASTHU
98400 34209

Prime Location Plots For Sale
Scan Here for Location

Near Kilambakkam Bus Stop
Site @ Shri Sathya Sai Nagar Phase-2 Ayyancheri, Chennai.

* Near Kilambakkam Bus Termius
* 10 minutes to Urappakkam Rly. Stn.
* Vandaloor Zoo
For Enquiery
Contact No. : 98400 34209
VRM Sathya Planners
No. 25, Panchayat Colony, Radha Nagar, Chromepet, Chennai - 600 044

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
24 HRS POWER BACKUP*

NEW Projects
4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
24 HRS POWER BACKUP*

NEW Projects
4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
24 HRS POWER BACKUP*

NEW Projects
3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD HDFC BANK SBI

# திருக்கார்த்திகை தீபம் வரலாறு



திருக்கார்த்திகை திருநாளென்பது தீபங்களை ஏற்றி இல்லத்திலும், உள்ளத்திலும் ஒளி பெற இறைவனை வணங்கும் ஓர் ஒப்பற்ற தீபஒளி திருநாளாகும் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தை சிறப்பாக கருதி, திருகார்த்திகை என பெயரிட்டு, வீடுகளிலும், கோயில்களிலும், விளக்கேற்றி சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். வயல்களிலும், கோயில்களிலும், பனை மற்றும் தென்னை ஓலை கொண்டு சொக்கப்பனை உருவாக்கி, அதனை அக்கினிக்கு இரையாக்கி ஒளிரும் பிழம்பை ஈசனாக நினைத்து வணங்கி வருகின்றனர். கார்த்திகை மாதத்தில் கொண்டாடப்படும் இக்கார்த்திகை தீப விழா மூன்று விதமாக வெவ்வேறு நாட்களிலும் அனுசரிக்கப்படுகிறது.

**1 குமாராலய தீபம்:** கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நட்சத்திரத்தை முருகனுக்கு உரியதாக கருதி அந்நாளில் முருகன் ஆலயங்களில் தீபமேற்றி வழிபடுகின்றனர். இது குமாராலய தீபம் ஆகும்.

**2 விஷ்ணுவாலய தீபம்:** கார்த்திகை மாதத்தில் வரும் ரோகிணி நட்சத்திரம் கிருஷ்ணருக்கு உரியதாகும். இந்நாளில் பெருமாள் ஆலயங்களில் தீபமேற்றி கொண்டாடுவதை விஷ்ணுவாலய தீபம் என்று அழைக்கிறார்கள்.

**3 சர்வாலய தீபம்:** கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி அன்று வீடுகளிலும், ஆலயங்களிலும் விளக்கேற்றி கொண்டாடுவதற்கு சர்வாலய தீபம் என்று பெயர்.

**வரலாறு:** பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகியோர் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலை செய்வதாக நம்பப்படுகிறது. அதில் படைத்தல் தொழில் செய்யும் பிரம்மனுக்கும், காத்தல் தொழில் செய்யும் விஷ்ணுவுக்கும் தங்களில் யார் பெரியவர் என்ற யுத்தம் தொடங்கியது. அதற்கு பதில் தேடி இருவரும் சிவனிடம் சென்றனர். இவர்களின் வாதத்தை கேட்ட ஈசன் பிரமாண்ட ஜோதி வடிவெடுத்தார். தன்னுடைய அடியையும், முடியையும் யார் கண்டு வருகிறார்களோ அவர்களே பெரியவர் என்று சொல்ல இருவரும் களத்தில் இறங்கினார். ஈசனின் அடி தேடி திருமால் வராக உருவெடுத்து மண்ணிற்குள் செல்ல, பிரம்மன் அன்ன பறவையாகி முடியைத் தேடி பறந்தார். எவ்வளவு அடியில் சென்றும் பாதத்தை காணாத திருமால் தனது தோல்வியை ஒத்துக் கொண்டு சரணடைந்தார். ஆனால் மேலே சென்ற பிரம்மனுக்கு தோல்வியை ஒப்புக்கொள்ள மனம் வரவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்த போது ஈசனின் முடியிலிருந்து தாழம்பூ மலரொன்று விழுந்தது. அதை பிரம்மன் மலரை எடுத்துக் கொண்டு ஈசனிடம் வந்தார். தான் முடியை கண்டுவிட்டதாகவும், அதற்கு இம்மலரே சாட்சி எனவும் வாதிட்டார். இதனால் கோபமடைந்த சிவன் தாழம்பூ மலரை இனி நான் பூஜைக்கு ஏற்பதில்லை எனவும், பிரம்மனுக்கு பூமியில் ஆலயம் இருக்காது எனவும், சாபமிட்டார். தனது தவறை உணர்ந்து பிரம்மன் மன்னிப்பு கோரினார். பிரம்மனும், விஷ்ணுவும் தங்கள் தோல்வியை ஒப்புக்கொண்டு ஈசனே பெரியவர் என்று வணங்கினர். தங்களுக்கு காட்சி அளித்த அதே ஜோதி வடிவில் மக்களுக்கும் காட்சி அளிக்க வேண்டும். என்று வரம் கேட்க ஈசனும் வரமளித்தார். அந்த வரத்தின் படி திருகார்த்திகை திருநாளில் திருவண்ணாமலையில் ஈசன் ஜோதி வடிவாய் எழுந்து இன்றும் அருள் புரிகிறார் என்பது இந்து மக்களின் நம்பிக்கை ஆகும். இதுவே திரு கார்த்திகை ஜோதியின் வரலாறு. பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து கார்த்திகை விரதம் இருப்பவர்களுக்கு வேண்டியது கிட்டும் என்பது ஐதீகமாகும். இத்தகைய சிறப்புடைய இந்நன்னாளில், நான் என்ற ஆணவத்தை அழித்து முழுமையாக இறைவனிடம் நம்மை சமர்பித்து, தீபமேற்றி, ஜோதி வடிவான இறைவனின் அருள் பெறுவோம்.

**மற்றொரு புராணக்கதை:**

கார்த்திகை தீபத்தை முருகனுடன் இணைக்கிறது. சரவண பொய்கை என்ற ஏரியில் ஆறு குழந்தைகளின் வடிவத்தை முருகப்பெருமான் ஏற்றுக்கொண்டு ஆறு கிருத்திகை நட்சத்திரங்களால் பராமரிக்கப்பட்டார். இந்த நாளில், பார்வதி தேவி கந்தத்தின் ஆறு வடிவங்களையும் ஒன்றிணைத்தார். இதனால், கார்த்திகேயன் ஆறு முகங்களைக் கொண்டவர், தமிழ் கலாச்சாரத்தில் ஆறுமுகன் என்று பிரபலமாக அறியப்படுகிறார்.


CLASSIFIEDS

RENTAL

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2 BHK
PURE VEG
8072230451

FLAT RESALE

FLATS FOR SALE
@ CHROMPET
HASTHINAPURAM
2BHK-850 Sqft ,450UDS
42 LAKHS
FIRST FLOOR / CAR PARKING
99620 03409

INDEPENDENT HOUSE

IND HOUSE FOR SALE
@ PALLAVARAM
DHARGAS ROAD
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
FLATS FOR SALE
@ CHROMPET
1,2,3 BHK
AVAILABLE
80722 30451

FLAT FOR RESALE
@HASTHINAPURAM
3 BHK , 1900 Sqft
FIRST FLOOR, LIFT, CCP
IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

COMMERCIAL RENT

COMERCIAL SPACE FOR RENT
@TAMBARAM-GST ROAD
KADAPERI NR MEPZ
NEXT TO DINDUGAL THALAPAKATI BIRIYANI
500 SQFT- FIRST FLOOR
(South Side) Suitable For:
Dr.Clinic, Office&Shop
94433 35938 / 97913 79952

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS - 412 Sqft 1ST FLOOR
@ HASTHINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD ,1ST FLOOR
LIFT ,CCP
80722 30451

BUYING &SELLING

KK REAL ESTATE
குரோம்பேட்டை, நெமிலிச்சேரி, சிட்லபாக்கம், திருமலைநகர், தாம்பரம் பகுதிகளில் வீட்டு மனைகள், பிளாட்டுகள், புது வீடு, பழைய வீடு, கமர்ஷியல், லீஸ், வாடகை, வாங்க, விற்க அணுகவும்.
91763 09144 / 88254 47091

DISCLAIMER
Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999

GST ROAD NEWS
FOR ADVERTISMENT
DETAILS CONTACT
89395 26999 / 044-22236399


# கார்த்திகை மாத ஏகாதசி



கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசி மிகவும் சிறப்பான நாளாகும். பெருமாள் கோயிலுக்கு சென்று நெய் தீபம் ஏற்றி பதினோரு முறை வலம் வந்து வணங்குவதினால் தாயின் அன்பு போல் பெருமாளின் அருள் கடாட்சம் பெருகி வாழ்க்கையில் செல்வம், ஆரோக்கியம், மனநிம்மதி அதிகரிக்கும். கார்த்திகை மாதம் செய்யும் தானத்துக்கு இருமடங்கு பலன் உண்டு. கார்த்திகை மாதம் நெல்லிக்கனி தானம் செய்தால் உயர் பதவி கிடைக்கும். கார்த்திகை மாத துவாதசி நாளில், ஏழைகளுக்கு அன்ன தானம் செய்தால், கங்கைக் கரையில் ஆயிரம் பேருக்கு அன்ன மிட்ட பலன் கிடை க்கும் என்பது ஐதீ கம். மகாவிஷ்ணு வை கஸ்தூரியால் அலங்கரித்து, தாமரை மலர்களால் அர்ச்சனை செய்து வழிபட்டால் தேவாதிதேவர்களால் பெற முடியாத பாக்கியத்தைக் கூட பெறலாம் என்பர்.கார்த்தி கையில் விஷ்ணுவின் சந்நிதிக்கு நேரே அமர்ந்து கொண்டு, பகவத் கீதையின் விபூதி யோ கம், பக்தி யோகம், விஸ்வரூப யோகம் ஆகிய வற்றை பாராயணம் செய்தால், சகல பாவங்களும் நீங்குவதுடன் புண்ணியங்களும் நம்மை வந்து சேரும். கார்த்திகை மாதம் ஆலயத்தை சுத்தம் செய்தால் அளவிடற்குரிய பலன்கள் கிடைக்கும். கார்த்திகை மாதம் பகவத்கீதை படித்தால் மன அமைதி உண்டாகும். கார்த்திகை புராணத்தை கேட்டால் நோய், ஏழ்மை அகலும். கார்த்திகை மாதத்தில் ஏகாதசிக்கு அடுத்த நாள் துளசி தேவியை மகாவிஷ்ணு மணந்ததாகப் புராணம் சொல்கிறது. மகாவிஷ்ணு நெல்லி மரமாகத் தோன்றியவர் என்பதால், கார்த்திகை ஏகாதசி அன்று துளசிச் செடியுடன், நெல்லி மரத்தடியில் பூஜை செய்ய வேண்டும். நெல்லி மரம் இல் லாத பட்சத்தில் வீட்டில் உள்ள துளசி மாடத்தில் நெல்லி மரத்தின் ஒரு சிறிய கிளையை வைத்துப் பூஜித்து துளசி கல்யாணம் செய்தால் திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும்.

# திருவண்ணாமலை மகா தீபம்



திருவண்ணாமலையில் நடைபெறும் தீபத் திருவிழா தனித்தன்மை வாய்ந்தது. இதற்கு பல சிறப்புகள் உண்டு. இந்த தீபத்திற்கு கார்த்திகை விளக்கீடு, ஞானதீபம், சிவ ஜோதி, பரஞ்சுடர் என்ற பெயர்களும் உண்டு.

**தீபத்தை தரிசிப்பதால் ஏற்படும் நன்மைகள்:**

திருவண்ணாமலையில் ஏற்றப்படும் கார்த்திகை தீபத்தை நேரில் பார்த்தவர்களின் 21 தலைமுறைக்கு முக்தி கிடைக்கும். திருவண்ணாமலையை பார்த்து 'நமசிவாய' என்று சொன்னால் அந்த மந்திரத்தை 3 கோடி முறை உச்சரித்த புண்ணியம் கிடைக்கும்.திருவண்ணாமலையின் உச்சியில் தீபம் ஏற்றப்படும் போது மலையின் உள்பகுதியில் ஒலி ஒன்றைக் கேட்டதாக ரமணர், சேஷாத்ரி சுவாமிகள் கூறியுள்ளனர்.திருவண்ணாமலை கார் த்திகை தீபம் ஏற்றிய பிறகு அதை வணங்கி கிரிவலம் வந் தால் அந்த ஜோதியின் கதிர் கள் உடம்பில் பட்டு ஆன்ம பலம் அதிகரிக் கும். தீபத் திருநாளில் 5 முறை கிரிவலம் வர பாபங் களிலிருந்து முழு விமோசனம் கிடைக்கும். தீபம் ஏற்றப் படும் போது, 'தீப மங்கல ஜோதி நமோ நம' என்ற பாடலை பாட, குடும்பத்தில் மங்கலம் உண்டாகும். திருவண் ணாமலை கார்த்திகை தீபத்தை தரிசிக்க சித்தர்கள் வருகை தருவார்கள் என்பது நம்பிக்கை. அப்படி வரும் சித்தர்கள் மலை உச்சியில் தீபம் ஏற்றும் கொப்பரை நெய்யில் சக்தி வாய்ந்த மூலி கை தைலத்தை சேர்த்து விடுவதாக சொல்கிறார்கள். இதனால் இது தீய சக்திகளை அழிக்கும்.கார்த்திகை தீபத் தன்று கிரிவலம் செய்பவர்க்கு 1008 அச்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும். கார்த்திகை தீபத்தன்று சிவலிங்கம் முன் நெய்விளக்கேற்ற வாழ்க்கை பிரகாசமாகும். கார்த்திகை தீப காட்சியை பார்ப்பவர்களுக்கு சகல தானம் கொடுப்பதால் கிடைக்கும் புண்ணியம் கிட்டும்.திருவண்ணாமலையில் தீபம் ஏற்றும் சமயம் அங்கு இருந்து தரிசித்தால் குழந்தை பாக்கியம் கிட்டும்.

# ஐயப்ப பக்தர்கள் விமானத்துக்குள் இருமுடி எடுத்துச் செல்ல அனுமதி


மத்திய சிவில் விமான போக்குவரத்து மந்திரி ராம மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.அவர் தனது 'எக்ஸ்' பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில் கூறியிருப்பதாவது: புனித மான இருமுடியுடன் தொடர்புடைய உணர்வுகளை மதிக்கும் வகையில், விமானங் களில் அய்யப்ப பக்தர்கள் தங்களுடன் இருமுடியை எடுத்துச்செல்ல அனுமதிப்பது என்று மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் முடிவு செய்துள்ளது. பொருட்கள் வைக்கும் பகுதியில் எடுத்துச்செல்லாமல், பயணிகள் பகுதியில் தங்களுடனே வைத்துக் கொள்ளும்'கேபின் லக்கேஜ்' ஆக கொண்டு செல்லலாம். இதன் மூலம் அவர்களின் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் பாதிக்கப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படும். தேவையான அனைத்து பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற் றப்படும் அதே வேளையில், பக்தர்களின் உணர்வுகளுக்கு முழு மதிப்பு அளிக்கப்படும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சிவாலயங்களில் 1008 சங்காபிஷேகம்



திங்கட்கிழமை என்பது ''சோமவாரம்'' என்றழைக் கப்படுகிறது. சிவபெருமானை நினைத்து திங்கட்கிழமைகளில் மேற்கொள்ளப்படும் விரதம் என்பதால் சோமவார விரதம் என்று பெயர் பெற்றது. இந்த விரதத்தை கார்த் திகை மாதம் முதல் திங்கள்கிழமையிலிருந்து ஆரம்பித்து, கார்த்திகை மாதம் வரும் திங்கள் கிழமை அனைத்திலும் கடைப்பிடிக்க வேண்டும். சயரோகத்தில் துன்புற்று அழியும்படி சபிக்கப்பட்ட சந்திரன், இந்த விரதத்தைக் கடைப்பிடித்து, பாவ விமோசனம் பெற்று சிறப்பு பெற்றான். அவனுக்குச் சிவபெருமான் அருள் புரிந்ததுடன், அவனை தனது முடிமேல் சூடிக்கொண்டு 'சந்திரசேகரர்' என்ற பெயரையும் ஏற்றார். சந்திரனின் நல்வாழ்வுக்காக அவனுடைய மனைவி ரோகிணி அவனு டன் சேர்ந்து இந்த விரதத்தைக் கடைப்பிடித்தாள். அன்று முதல், பெண்கள் சௌபாக்கியத்துடன் திகழவும், கணவனுக்கு மேன்மைகள் உண்டாகவும், நோய் நொடிகள் இல்லாமல் இருக்கவும், இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இந்த நாட்களில் சிவாலயங்களில் 'சங்காபிஷேகம்' நடைபெறும். சந்திரசேகரர் பவனி விழா நடைபெறும். 108 அல்லது 1008 சங்குகளில் நீரை நிரப்பி, யாக சாலைகளில் வைத்து, வேள்வி செய்து, அந்நீரால் சிவபெருமானுக்குத் திருமுழுக்காட்டுகின்றனர். திருவெண்காடு, திருக்கழுக்குன்றம், திருக்கடையூர் போன்ற சிவாலயங்களில் ஆயிரம் சங்காபிஷேகம் நடைபெறும். கார்த்திகை சோமாவார திருநாட்களில் சிவத்தலங்களைத் தரிசிப்பதும் கோடி புண்ணியத்தைப் பெற்றுத் தரும். குறிப்பாக இறைவன் சிவனார், சந்திரனின் பெயரை ஏற்று அருள் பாலிக்கும் தலங்களைத் தரிசிப்பது விசேஷம்.

# கார்த்திகை மாத சனிக்கிழமை வழிபாடு



கார்த்திகை மாத சனிக்கிழமை என்பது வைஷ்ணவம், சைவம், சக்தம் என அனைத்து சமயங்களிலும் மிகச்சிறப்பான ஆன்மீகச் சங்கம மாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் சனிபகவானின் கிரு பை, கார்த்திகை மாத தீபத் திருவிழாவின் ஆற்றல், கார்த்திகை நட்சத்திரத்தின் புனிதம் என பல்வேறு சக்திகளின் சேர்க்கை ஏற்படும்.

**கார்த்திகை சனிக்கிழமை – சிறப்புகள்:**

சனி பகவானின் வீழ்ச்சி குறையும் நாள். கார்த்திகை மாதம் தெய்வீக ஒளியின் மாதம். தீபவழிபாடு மிகுந்த பவனி கொண்டது. இந்த ஒளி ஆற்ற லுடன் சனி பகவானின் தீவிர ஆற்றல் சமநிலையடைந்து, அவருடைய பீடங்கள் குறையும். ஆகவே இந்த நாளில் சனிபகவானுக்கு செய்யப்படும் வழிபாடு பாவ பரிகாரத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சிவபெருமான் அருள் அதிகம் கிடைக்கும் நாள். கார்த்திகை மாதம் சிவனுடைய பிரதான மாதம். இதேசமயம் சனி பகவானும் சிவபெருமானின் அனுகிரகத்தால் நியமிக்கப்பட்ட கிரகமாக கருதப்படுகிறார். இதனால் இந்த நாளில் சிவபெருமானை தொழுவது பல மடங்கு பலனைத்தருகிறது. முருகப் பெருமானுக்கு விசேஷ நாள். கார்த்திகை மாதம் முருகனின் பிறப்புமாதம். எனவே சனிக்கிழமை முருகன் வழிபாடு செய்தால் மனவருத் தம், பயம், தடைகள் அகலும்.





சிட்லபாக்கத்தில் ஸ்ரீ சர்வமங்களா நகர் மற்றும் ஷாவாலஸ் காலனி ஆகிய இரண்டு நகர்களில் ஏற்படும் மின் அழுத்தத்தை சீரமைக்க பொது மக்களின் கோரிக்கையை ஏற்று மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்ராஜாவிடம் மனு அளித்தார். அதன்பேரில், தாம்பரம் மின்சார வாரிய செயற்பொறியாளர் கருப்பசாமி உதவி பொறியாளர் ஜேகப் ஆய்வு செய்து புதிய இரண்டு மின் மாற்றிகள் பொருத்தப்பட்டுள்ளது.இதனை எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பகுதி திமுக செயலாளர் ரா.சுரேஷ், வட்ட செயலாளர்கள் ரா.சதீஷ், ரா.ராஜா, மாநகர கழக அணிகளின் அமைப்பாளர்கள் இ.மனோகரன், ரா.விஜயகுமார், டி.ஆர்.சிவகுமார், பரிமளா சிட்டிபாபு, பா.பிரதாப், பாரதிதாசன், எஸ்.ஜெகன்நாதன், கட்சி நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

## 3வது இடத்தில் இந்தியா!

சக்திவாய்ந்த நாடுகளின் பட்டியலில் ஜப்பானை பின்னுக்கு தள்ளி 3வது இடம் பிடித்துள்ளது இந்தியா.கடந்த ஆண்டு 38.5 புள்ளிகளை பெற்றிருந்த நிலையில், தற்போது 40 புள்ளிகளைப் பெற்று முன்னேற்றம்.

## பதவி தரும் கோவிலில் தமிழிசை வழிபாடு

திருவாரூர் அருகே, பதவி தரும் திருக்கோயிலில் முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் சாமி தரிசனம் செய்தார்.திருவாரூர் மாவட் டம், குடவாசல் வட்டத்துக் குட்பட்ட திருச்சிறுகுடி என்ற கிராமத்தில், மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு மங்களாம்பிகை சமேத சூக்ஷ்ம புரீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. இந்த தளத்தில் சூரியன் மற்றும் செவ்வாய் ஆகிய இரண்டு கிரகங்கள் பூஜித்தலமாக கூறப்படுகிறது. இந்தக் கோயிலில் வழிபட்டால் பதவிகளையும், வாழ்வில் முன்னேற்றங்களையும் கொடுக் கும் வல்லமை வாய்ந்த தலமாக விளங்கி வருகிறது.

## தென் மாவட்டங்களில் வரலாறு காணாத குளிர்

தூத்துக்குடி நெல்லை தென் காசி கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் கடுமையான குளிர் நிலவு கிறது. பகல் நேரங்களில் ஊட்டி கொடைக்கானல் போன்று மிக கடுமையான குளிர் பதிவாகியுள்ளது.

நெல்லையில் 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 22°¾ குளிர் பதிவாகியுள்ளது. நெல்லை வரலாற்றில் டிசம்பர் ஜனவரி மாதத்தில் கூட இந்தளவு பகல் நேரத்தில் குளிர் பதிவானது இல்லை.

மதுரையிலும் 22.6°¾ வெப்பநிலை பதிவானது. இதற்கு முன்பு 27.01.2011 அன்று 24°¾ வெப்பநிலை பதிவான நிலையில் தற் போது அச்சாதனை முறியடிக்கப் பட்டு மதுரை புதிய வரலாறு படைத்துள்ளது.


பொதுவாக கடலோர பகுதியில் குளிர் அதிகம் பதிவாகாது. ஆனால் தூத்துக்குடியில் 20.5°¾ அளவுக்கு வெப்பநிலை குறைந்துள்ளது.இதற்கு முன்பு தூத்துக்குடி வரலாற்றில் 28.01.2004 ல் 25.5°¾ வெப்பநிலை பதிவான நிலையில் தற்போது புதிய வரலாறு படைத்திருக்கிறது தூத்துக்குடி.

கோவில்பட்டி :21.8°¾ தென்காசி :21°¾, தூத்துக்குடி :20.5°¾ திருச்செந்தூர் :20°¾ பாம்பன் :23°¾ கன்னியாகுமரி :26.6°¾

திருச்செந்தூர் தென்காசி கோவில்பட்டி பாம்பன் உள்ளிட்ட அனைத்து தென் பகுதிகளிலுமே 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குளிர் பதிவாகியுள்ளது.

KAMU'S AUTHENTIC BRAHMIN KITCHEN PROVIDES
"SAMBAR, RASAM, KOOTU , PORIYAL" FOR LUNCH& S&N INDIAN DELICACY DINNER ITEMS ON DOOR DELIVERY / DIRECT Collection at Purushotham Nagar, Chromepet on daily/ Monthly basis. (Small and Bulk orders are welcome)
99404 14187

## வாழைப்பழ உருண்டை



குழந்தைகளுக்கு புதிதாக ஏதாவது 'ஸ்நாக்ஸ்' செய்ய வேண்டும் என விரும்பினால், வாழை பழங்களை வைத்து, வாழைப்பழ உருண்டை செய்யலாம். இதனால், குழந்தைகளின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**செய்முறை :** ஒரு வாணலியில் இரண்டு டீஸ்பூன் நெய் ஊற்றவும். நெய் கொஞ்சம் சூடேறியதும, வெட்டி வைத்து உள்ள இரண்டு செவ்வாழை பழங்களை சேர்க்கவும்.நெய், செவ்வாழை இரண்டும் நன்கு வதங்கி வரும் போது, ஒரு கப் ரவையை உடன் சேர்க்கவும்.ஐந்து நிமிடத்துக்கு நன்கு வதங்கிய பின், தேங்காய் துருவலை சேர்த்து, நன்றாக கலக்க வேண்டும். இதனுடன் ஒரு கப் பால் சேர்த்து, ரவையை நன்கு வேக வைக்கவும். பின், ஒரு கப் சர்க்கரை, சிறிதளவு ஏலக்காய் தூள் சேர்த்து கொள்ள வேண்டும். இந்த கலவையை மிதமான சூட்டில், ஐந்து நிமிடம் வேக வைக்கவும். கை தாங்கும் சூடு இருக்கும் போது, சிறிய சிறிய உருண்டைகளாக உருட்டி கொள்ளவும். பின், வாணலியில் சிறிதளவு நெய் ஊற்றி, உருட்டி வைத்துள்ள உருண்டைகளை உடன் சேர்த்து கொள்ளவும். உருண்டைகள் அனைத்தும் பொன்னிறமாகும் வரை அடுப்பை மிதமான தீயில் வைத்து, லேசாக பொறித்து எடுத்தால் போதும். சுவையான வாழைப்பழ உருண்டை ரெடி. இனிப்பு, சுவைக்கு ஏலக்காய் தூள் சேர்த்துள்ளதால், குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர். செவ்வாழை, பால், நெய்யில் உள்ள ஊட்டச்சத்துகள் அனைத்தும் உடலுக்கு வலிமையை கொடுக்கும்.

VISHNUSRI HOMES
Ind. House Plan
Flat Renovation
Expansion
Modular Kitchen
Sump & Compound Wall
88257 88408 / 73972 32365

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

KR CONSTRUCTIONS
ENGINEER & CONTRACTOR
CONSTRUCTION
ARCHITECTURAL PLANS
APPROVALS
RENOVATION
LABOUR CONTRACT
RESIDENTIAL CONSTRUCTION 2450 / SQFT Inclusive
OVER HEAD & SEPTIC TANK
80724 99969

"Thank You Lord For Answering My Prayers"

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged
MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004



## மூன்று உலக நாட்டினருக்கு அமெரிக்காவில் நுழைய தடை


அமெரிக்காவுக்கு மூன்றாம் உலக நாடுகளில் இருந்து புலம் பெயர்வோருக்கு நிரந்தரத் தடை விதிக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளதாக அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: முந்தைய அதிபர் ஜோ.பைடன் நிர்வாகம், லட்சக்கணக்கான மக்களை அமெரிக்காவுக்குள் அனுமதித்ததை நான் திரும்பப் பெற உள்ளேன். அமெரிக்காவுக்கு பயன்படாதோரும், அமெரிக்காவை நேசிக்க முடியாத அனைவரும் வெளியேற்றப்படுவார்கள்.அமெரிக்கர் அல்லாதோருக்கு கிடைத்து வரும் அரசு சலுகைகளையும் நான் நிறுத்தப்போகிறேன் என்றார்.

## தங்கம் விலை அதிரடி உயர்வு

சென்னையில் தங்கம் விலை ஒரே நாளில் பவுனுக்கு ரூ.1,120 உயர்ந்து, ரூ.95,840க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ.140 உயர்ந்து, ரூ.11,980க்கு விற்கப்படுகிறது.

WANTED
MARRIED FEMALE ACCOUNTANT FOR TIMBER IMPORT COMPANY AT CHROMPET WITH KNOWLEDGE OF TALLY, BILLING, GST FILING, TDS, TCS, EXCEL, MS OFFICE AND COMMUNICATION SKILL.
98846 20066

## குளிர்காலத்தில் உதடுகளை பாதுகாப்பது எப்படி?



குளிர்காலத்தில் சிலருக்கு உதடுகள் வெடிப்பு ஏற்படும். வெளியே பார்ப்பதற்கு மிகவும் அசிங்கமாகவும், உதடு காய்ப்பு இருப்பது போல காணப்படும். உதடுகளுக்கு ஊட்டமளிக்க சில எளிய வழிகள்:

**தேன், தேங்காய் எண்ணெய்:**

தேன் மற்றும் தேங்காய் எண்ணெயின் கலவையை உலர்ந்த, உடைந்த உதடுகளில் தடவுவதால் மாய்சரைசர் மாதிரி ஈரப்பதத்தைத் தக்க வைக்க உதவும். ஒரு டேபிள் ஸ்பூன் தேனுடன் ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெயை கலந்து படுக்குமுன் உதடுகளில் தடவி காலையில் கழுவிவர உதடுகள் மென்மையாகும்.

**சர்க்கரை ஸ்கரப்:**

சர்க்கரையை தேங்காய் எண்ணெய் கலந்து வட்டமாக உதடுகளில் ஸ்கிரப் மாதிரி மசாஜ் செய்து, சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவிவர இறந்த சரும செல்களை அகற்றி புதிய செல் வளர்ச்சியை ஊக்கு விக்கும்.

**கற்றாழை ஜெல்:**

உலர்ந்த உதடுகளுக்கு சிறந்த இயற்கை தீர்வாக கற்றாழை ஜெல் உதவுகிறது. சிறிது கற்றாழை ஜெல்லை உதடுகளில் தடவி பத்து நிமிடம் கழித்து வெது வெதுப்பான நீரில் கழுவி வந்தால் உதடுகள் ஈரப்பதம் பெற்று மென்மையாகும்.

**வெள்ளரி துண்டுகள்:**

வெள்ளரி கண்களைச் சுற்றியுள்ள வீக்கத்தை குறைப்பது மட்டுமல்லாமல் வறண்ட உதடுகளை நீரேற்றமாக்கி ஈரப் பதத்தைதக்க வைக்கும். உதடுகளில் வெள் ளரித் துண்டுகளை தேய்த்து வந்தால் மென்மை யாகும்.

**தண்ணீர் நிறைய குடிக்கவும்:**

நிறைய தண்ணீர் குடிப்பதை வழக்கமாக்கவும். ஈரப்பதமான உதடுகளை பரா மரிப்பதற்கு நீரேற்றமாக இருப்பது முக்கியம். சருமத்தின் உள்ளே நீரேற்றமாக வைத்திருக்க நாள் முழுவதும் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். வறண்ட, உடைந்த உதடுகளுக்கு நல்ல வழி வகுக்கும். அதிக தண்ணீர் குடிப்பதால் சருமம், உதடுகள் அழகாகவும், சிறந்ததாகவும், ஈரப்பதமாகவும் இருக்கும். இதில் ஏதாவது ஒன்றை செய்துவர உதடுகள் வெடிப்பு ஏற்படாமல் ஈரத்தன்மையுடன் உதடுகள் அழகாக பளபளக்கும்.

ஸ்ரீ சாய் சங்கரா மேரேஜ் & கேட்டரிங் சர்வீஸ்
No.40, Station Road (Nr. Railway Station), Chrompet,(Opp. Karur Vysya Bank),Ch.-44
Branch @ : No.11,Valluvar Main Road, Gandhi Nagar, Chrompet, Chennai - 44
Combo Pack
அவல் பொறி உருண்டை 4 Nos.
நெல் பொறி உருண்டை 4 Nos.
மனோகரம் உருண்டை 4 Nos.
வேர்கடலை உருண்டை 4 Nos.
ரவாலாடு 4 Nos.
RS.350/- Only
நெய் அப்பம் 3 பீஸ் RS. 50
அதிரசம் 3 பீஸ் 50
லட்டு 3 பீஸ் 50
இல்லத்தரசிகளுக்கும், முதியோர்களுக்கும், அலுவலகம் செல்வோர்க்கும் மகிழ்ச்சியான செய்தி தினம் தினம் சுடச்சுட கிடைக்கும் .இது நம்மாத்து சமையல்
சாதம் மட்டும் வைத்தால் போதும்
காலை 8:30 மணி முதல்: அரவை சாம்பார், தக்காளி ரசம், பீன்ஸ் பருப்பு பூசிலி, காரகறி/தேங்காய் கறி, கூட்டு / அவியல், ஸ்பெஷல் வத்த குழம்பு, சுட சுட கிடைக்கும்
மாலை 5:30 மணி முதல்: சப்பாத்தி, சேவை, இட்லி, டிபன் சாம்பார், பன்னீர் பட்டர் மசாலா, சென்னா மசாலா (Week End), வெஜ் கிரேவி, வெஜ் குருமா, அடை அவியல் (புதன்,சனி)
Order on Mobile APPல் Play Storeல் Download செய்து கொள்ளலாம். SWIGGY zomato
Join the group for getting 'DAILY MENU' Say HI to 97515 19066
தினசரி மெனு பெற மேலே உள்ள நம்பருக்கு HI என்று மெசேஜ் அனுப்பவும்
For Door Delivery 90472 19066
வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய கார்த்திகை தீபத் திருநாள் (03.12.25) நல்வாழ்த்துக்கள்!
98418 19066 / 94445 53160





தாம்பரம் மாநகராட்சி 38 வது வார்டு பத்மநாப நகர் ஜானகிராமன் தெருவில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்காக சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி முன்னிலையில் பூஜை போடப்பட்ட போது எடுத்த படம். அருகில் மாமன்ற உறுப்பினர் சரண்யா மதுரை வீரன், சி.ஆர். மதுரை வீரன், க. ரமேஷ், சந்திரசேகரன், வரதகவுண்டர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## சபரி ஆசிரமம் - 25 ஆம் ஆண்டு ஐயப்ப பூஜை, இலட்சார்ச்சனை, அன்னதானம்

குரோம்பேட்டை விவேகானந்தா தெரு காந்திஜி நகரில் அமைந்துள்ள சபரி ஆசிரமம் 25ஆம் ஆண்டு லட்சார்ச்சனை மற்றும் அன்னதானம் குரோம்பேட்டை ராதா நகர் இந்திரா காந்தி குறுக்குத் தெருவில் அமைந்துள்ள குரோம்பேட்டை கல்சுரல் அகாடமியில் இன்று காலை நடக்கிறது. காலை 5:30 மணி அளவில் கணபதி ஹோமம், 6:30 மணி அளவில் லலிதா சகஸ்ரநாம பாராயணம், 9 மணி அளவில் ஐயப்பன் லட்ச் அர்ச்சனை, 11.15 மணியளவில் தீபாதாரணை, 11.30 மணி அளவில் சென்னை ஸ்ரீ ஆதித்யா ராஜேஷ் குழுவினரின் நாம சங்கீர்த்தன நிகழ்ச்சி,2.30. மணி அளவில் சிறப்பு மகா தீபாதாரணையும் காலை 10 மணி முதல் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறுகிறது விழாவில் கலந்துகொண்டு ஐயப்பன் அருளுக்கு பாத்திரம் ஆகும்படி சபரி ஆசிரம நிர்வாகிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்புக்கு 94443 14449, 99625 38486.

## நெல்லையில் கடும் குளிர்

நெல்லையில் கடந்த 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குளிர் பதிவாகியுள்ளது 20டிகிரி சென்டிகிரேட் வெப்ப நிலை இருப்பதால் கடுமையாக குளிர் வாட்டுகிறது கடந்த இரண்டு நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

## செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு

புயல் காரணமாக செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து உபரி நீர் திறந்து விடப்படுகிறது ஏற்கனவே 1200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் தற்போது 2000 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது.


## இந்தியா வருகிறார் புதின்

ரஷ்ய அதிபர் புதின் இருநாள் அரசு முறை பயணமாக டிசம்பர் 4ஆம் தேதி இந்தியா வர உள்ளதாக அறிவிப்பு.உக்ரைனில் போர் தொடங்கியதற்கு பிறகு புதினின் முதல் இந்திய பயணம் இதுவென்பதால் முக்கியத்துவம் பெறுகிறது. கடைசியாக 2021 டிசம்பரில், புடின் இந்தியா வந்திருந்தார்.

## சென்னைக்கு 360 கிலோமீட்டர் தொலைவில் புயல்

சென்னைக்கு தெற்கே 360 கிலோ மீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தெற்கு தென்கிழக்கே 190 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ள டிட்வா புயல், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திரப் பிரதேச கடற்பகுதியை அதிகாலை சென்றடையும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

## ஆப்பிளில் உள்ள வைட்டமின் ஏ சருமத்தை பாதுகாக்கிறது



ஆப்பிளில் உள்ள வைட்டமின் சி சரும செல்களுக்கு மிகவும் நல்லது. இது கொலாஜன் உற்பத்திக்கு உதவுகிறது மற்றும் தோல் நெகிழ்ச்சித்தன்மையை பராமரிக்க உதவுகிறது. ஆப்பிளில் உள்ள தாமிரம் தீங்கு விளைவிக்கும் புற ஊதா கதிர்களில் இருந்து சருமத்தைப் பாதுகாக்கிறது.

மேலும், ஆப்பிளில் உள்ள வைட்டமின் ஏ சருமத்தை புற்றுநோய் செல்களில் இருந்து பாதுகாக்கிறது. சருமத்திற்கு நல்ல பாதுகாப்பையும், சரும செல்களின் ஆரோக்கியத்தையும் அதிகரிக்கவும், சருமத்தின் மிருது தன்மையை அதிகரிக்கவும் ஆப்பிளை எப்படி பயன்படுத்துவது என்று பார்க்கலாம். ஆப்பிளில் உள்ள வைட்டமின்கள் சருமத்திற்கு புத்துணர்ச்சி அளித்து, சருமத்தை பளபளப்பாக வைத்திருக்க உதவுகிறது. இது சருமத்தின் அதிகப்படியான அழுத்தத்தைக் குறைக்கிறது. சோர்வை நீக்குகிறது மற்றும் புத்துணர்ச்சி அளிக்கிறது. உங்கள் முகத்தின் பொலிவை உடனடியாக அதிகரிக்க விரும்பினால், இந்த முகமூடியைப் பயன்படுத்துங்கள். ஆப்பிள் 1 , தண்ணீர் 1 கப் முதலில் ஆப்பிளின் தோலை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கவும். பின் மிக்ஸியில் போட்டு சிறிது தண்ணீர் சேர்த்து நன்றாக அரைக்கவும்.

பின் அதனை முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவவும். இதை முதல் முறை செய்யும் போது உங்கள் முகத்தில் நல்ல மாற்றம் தெரியும். ஆப்பிளில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் சருமத்திற்கு இயற்கையான பொலிவை அளிக்க உதவுகிறது.

## புயலாகவே சென்னையை நெருங்கும் டிட்வா

வானிலை ஆய்வு மையதென் மண்டல தலைவர் அமுதா செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது. வங்ககடலில் மையம் கொண்டுள்ள டிட்வா புயல் மணிக்கு 10கி.மீட்டர் வேகத்தில் நகர்ந்து வருகிறது. டிட்வா புயல் மணிக்கு 10கி.மீட்டர் தூரத்தில் வடக்கு வடமேற்கு திசையில் நகர்கிறது. சென்னைக்கு 350 கி.மீட்டர் தூரத்தில் தெற்கு திசை யில் டிட்வாபுயல் மையம் கொண் டுள்ளது. புதுச்சேரிக்கு 250கி. மீட்டர் தொலைவிலும் காரைக் காலுக்கு 150கி.மீ தொலைவிலும் டிட்வா புயல் மையம் கொண்டுள்ளது. தொடர்ந்து வடக்கு வடமேற்கு திசையில் நகரும் டிட்வா புயல் வட தமிழ்நாட்டின் கடலோரத்தை ஒட்டி செல்லும். டிட்வா புயலாகவே சென்னையை நெருங்கும். கரையைக் கடக்காது. கடலோரத்தை ஒட்டி செல்லும்" என்றார். இதற்கு முன்பு டிட்வா புயல் சென்னையை நெருங்கும் போது தாழ்வுமண்டலமாக வலுவிழக்கும் என முன்பு கூறப்பட்டு இருந்த நிலையில் தற்போது புயலாகவே தென் மேற்கு வங்க கடலை அடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவை சீண்டும் சீனா

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவால் சட்ட விரோத மாக அமைக்கப்பட்ட ஒன்று. அது சீனாவின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி" என சீன வெளியுறவு செய்தித் தொடர்பாளர் பேச்சு. அருணாச்சலைச் சேர்ந்த பெண்ணிடம் ஆவணங்கள் கோரி சீனா துன்புறுத்திய விவகாரத்தில் இவ்வாறு கூறியுள்ளார். அப்பெண் துன்புறுத்தப்படவில்லை; விதிகள் மற்றும் சட்டங்களின் படியே சோதிக்கப்பட்டார் என்றும் விளக்கம்.

## புதுச்சேரியில் விஜய்க்கு அனுமதி மறுப்பு

தமிழக வெற்றிகழகத் தலைவர் விஜய் புதுச்சேரியில் டிசம்பர் 5ஆம் தேதி ரோடுஷோ நடத்த அனுமதி கேட்டு இருந்தார். ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக அனுமதி தர முடியாது என்று புதுச்சேரி அரசு கூறிவிட்டது.




## புயல் எங்கே கரையை கடக்கும்?

டிட்வா புயல் இன்றும், நாளையும் டெல்டா மாவட்ட கடற்கரையையொட்டி சில மணி நேரம் நீடித்து, பிறகு மெல்ல வடக்கு நோக்கி நகர்ந்து நாளை புதுச்சேரி மாமல்லபுரம் இடையே மேலும் செயலிழந்து கரையை கடக்கும்.இதன் காரணமாக இன்றும், நாளையும் ராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை, காரைக்கால், மயிலாடுதுறை, திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கடலூர் மாவட்டங்களில் 48 மணி நேர தொடர் கனமழை மற்றும் மிக கனமழை பெய்யும்.













Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725